# ஞானஸ்நானம் மற்றும் "புதிதான ஜீவன்"

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3, 4).*

ரோமர் *6:1-7*ஐப் புரிந்து கொள்ளுவதற்காக நாம் இவ்வசனங்களுக்கு வழி நடத்திய பவுலின் சிந்தனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அதிகாரங்கள் *1* முதல் *3* வரையிலும் பவுல், கிறிஸ்துவைக் கொண்டிராத புறஜாதியார் மற்றும் யூதர்கள் ஆகியோரின் நிலை பற்றி கலந்துரையாடினார்.

புறஜாதியார் பொல்லாங்கான மற்றும் பாவம் நிறைந்த வாழ்வில் ஈடுபட்டிருந்தனர், அச்செய்கைகளில் பெரும்பாலானவை யூதர்களுக்கு அருவருப்பாய் இருந்தன. அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்களாகவும், ஒழுக்கற்ற பாலுறவு கொள்பவர்களாகவும், மற்றும் அநீதியுள்ளவர்களாகவும் இருந்தனர் *(1:24-32)*.

யூதர்களும் கூட இதே செயல்முறைகளில் சிலவற்றைத் தாங்களும் பங்கேற்று நடப்பித்ததால் அவர்கள் சிறந்த நிலையில் இருக்கவில்லை *(2:1)*. அவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய நலனுக்கு, தாங்கள் பிரமாணத்தைப் பெற்றிருந்ததையும் மற்றும் விருத்தசேதனம் செய்யப்பட்டிருந்ததையும் சார்ந்திருந்தனர் *(2:17, 25)*. அவர்கள் நியாயப்பிரமாணத்தின் தர அளவையின்படி வாழவில்லை அல்லது விருத்தசேதனத்தின் அர்த்தத்தைத் தங்கள் வாழ்வில் கொண்டிருக்கவில்லை என்பது மாய்மாலத்திற்குரியதாக இருந்தது. அவர்களும் புறஜாதியாரைப் போலவே பாவிகளாய் இருந்தனர் *(3:9, 10, 23)*.

அவர்களின் செயல்கள் அவர்களை இரட்சிப்பதற்குப் பதிலாக, அவர்களின் செயல்கள் அவர்களை ஆக்கினைக்குள்ளாக்கின *(2:5-13)*. புறஜாதியாரோ அல்லது யூதர்களோ தங்கள் செயல்களினால் இரட்சிக்கப்

பட முடியாதிருந்தது, ஏனெனில் அவர்கள் யாவரும் பாவிகளாய் இருந்து (3:9, 10, 23) முழுமையற்ற செயல்களுடன் காணப்பட்டனர். பொல்லாங்கான நடவடிக்கைகளினால் கெடுக்கப்பட்டிருந்த அவர்களின் செயல்களை அவர்கள் சார்ந்திருப்பதற்குப் பதிலாக (4:1-8), அவர்கள் தங்களின் இரட்சிப்புக்குத் தேவ கிருபையைச் சாத்தியமாக்கியிருந்த (5:1, 2) இயேசுவின் செயலின் மீது விசுவாசம் கொண்டிருக்க வேண்டியிருந்தது.

நியாயப்பிரமாணமானது இந்தக் கிருபையை அளித்திருந்ததில்லை; மாறாக அது தனக்குக் கீழ் இருந்தவர்களைப் பாவத்தில் அடைத்துப் போட்டிருந்தது (3:20; 5:20, 21). புறஜாதியாரின் நிலையும் மேன்மையானதாக இருந்ததில்லை, ஏனெனில் அவர்கள் மனித கவனிப்பு மற்றும் அனுபவம் ஆகிய இயல்பான செயல்முறைகளின் மூலம் பெற்றிருந்த தேவனுடைய சித்தம் பற்றிய அறிவை மீறியிருந்தனர் என்ற உண்மையினால் பாவிகளாய் இருந்தனர் என்பது தெளிவாய்க் காணப்பட்டது (1:21; 2:14, 15). புறஜாதியாரும் யூதரும் ஆகிய இருசாராருமே நீதியற்றவர்களாய் இருந்தனர்; அனைவருமே தாங்கள் எந்தத் தராதரத்தின் கீழ் வாழ்ந்தார்களோ, அந்தத் தராதரத்தை மீறியிருந்தனர். மன்னிப்பைச் சாத்தியமாக்குவதற்காக, தேவன் - இயேசுவின் மூலம் - நீதியையும் நீதிமான்களாக்கப்படுதலையும் கொண்டு வரக் கிருபையையும், மற்றும் அவர்களின் பாவங்களையும் மீறுதல்களையும் மூடுவதற்கு மன்னிப்பையும் அளித்தார் (5:20, 21).

## “கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாமா?” (6:1)

மன்னிக்கப்பட்டவர்கள் சிலரின் சிந்தையில் பின்வரும் கேள்வியானது ஒருவேளை எழும்பியிருந்திருக்கலாம்: “கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாமா?” (ரோமர் 6:1ஆ). இதை, ஒரு இளம் மணப்பெண்ணிடம் அவளும் அவளது கணவரும் பொருளாதாரக் கஷ்டங்கள் எதையேனும் எதிர்கொண்டால், அந்தக் கடனை அவளது மாமா ஒருவர், தாம் அடைத்து விடுவதாகக் கூறியதற்கு ஒப்பிடலாம். அவள் தனது கணவருடன் ஆலோசனை செய்து, தாங்கள் தங்கள் நிதி நிலைமை குறித்து அக்கறைகொள்ள வேண்டியதில்லை என்றும், ஆனால் தங்களால் வாங்க முடியாதவைகளை - விலை உயர்ந்த ஒரு கார், ஒரு புதிய வீடு மற்றும் விலை உயர்ந்த உடைகள், ஆபரணங்கள் போன்றவற்றை - முயற்சி செய்து வாங்குவதில் செலவழிக்க வேண்டும் என்றும் முடிவு செய்கின்றனர். அந்தப் பணக்கார மாமாவின் நோக்கம் மற்றும் பெருந்தன்மை ஆகியவற்றைப் பற்றி அவர்கள் தகுதியற்ற வகையில் அனுகூலமாய் நினைத்துக் கொண்டு அவரால் செலுத்தப்படும்படியான ஒரு பெரிய கடனை உருவாக்குகின்றனர்.

இதே போன்ற வழிமுறையிலேயே, தேவன் தமது கிருபையானது நமது பாவங்களை மூடும் என்று வாக்குறுதி அளித்துள்ளார், ஆனால் இது நாம் பாவம் நிறைந்த செயல்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட வாழ்வை நாம் வாழ்வதற்கு நம்மை உற்சாகப்படுத்தும் நோக்கம் கொண்டதல்ல. இது

கிருபையின் நோக்கமாய் இருப்பதில்லை. ஞானஸ்நானத்தில் தகுதியான ஒரு ஆவிக்குரிய ஈடுபாடானது ஒரு புது இயல்பை ஏற்படுத்த வேண்டுமென்று பவுல் போதித்தார். கிறிஸ்தவர், கிறிஸ்துவுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதிய வாழ்வை வாழ வேண்டும்; அவர் கிருபையைச் சார்ந்திருப்பதின் காரணமாகத் தொடர்ந்து பாவம் செய்வதில்லை.

## "அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை" (6:3, 4)

### ஞானஸ்நானமும் புது வாழ்வும்

பவுல், கிருபையின் தவறான பயன்பாட்டிற்கெதிரான தமது கருத்தைக் கட்டி எழுப்புவதற்கு ஞானஸ்நானத்தைத் தேர்ந்து கொண்டது வினோதமானது என்று சிலர் நினைக்கலாம் (ரோமர் 6:1-7). ஞானஸ்நானம் என்பது ஆவிக்குரிய தொடர்பெதுவுமற்ற சடங்காக மட்டுமே இருந்திருந்தால், பாவம் நிறைந்த வாழ்வை முடித்துக் கொள்வதற்கான விவாதம் எதையும் ஞானஸ்நானம் என்ற கருத்திலிருந்து ஏற்படுத்த முடியாது. இருந்தாலும், ஞானஸ்நானம் என்பது தேவனுக்குக் கீழ்ப்படிகின்ற உடல் ரீதியான செயலாக மட்டுமின்றி, ஆவிக்குரிய, வாழ்வை மாற்றும் அனுபவமாய் இருப்பதால், ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து புது வாழ்வு ஒன்று ஏற்பட வேண்டும் என்ற பவுலின் விவாதம் மதிப்புள்ளதாய் இருக்க வேண்டும் - அது அவ்வாறே இருக்கின்றது.

ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ் நானம் பெறுவதால், நாம் அவருடன் இணைகின்றோம் (ரோமர் 6:3). சிலுவையில் இயேசுவின் மரணத்தின் மூலம், அவர் தமது உடல்ரீதியான வாழ்வை முடித்தார் - ஆனால் ஒரு புதிய உடல் ரீதியான வாழ்விற்குள் பிரவேசிக்கவே அவர் அதைச் செய்தார். ஆவிக்குரிய கருத்தில், ஞானஸ் நானம் என்பது நமது பாவம் நிறைந்த கடந்த கால வாழ்வு முடிந்து, ஆவிக் குரிய புது வாழ்வு தொடங்க வேண்டிய தருணமாய் இருக்க வேண்டும். பாவம் நிறைந்த நபராக தண்ணீரில் மூழ்கி, அதே பாவம் நிறைந்த நபராகத் தண்ணீரில் இருந்து வெளியே வரும் வெறும் உடல் ரீதியான செயலாய் மட்டும் இருப்பதற்குப் பதிலாக, நாம் இயேசுவோடும் அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலோடும் இணைக்கப்பட்டுள்ளதால் பழைய பாவம் நிறைந்த வாழ்வை மரணமடையச் செய்து, ஆவிக்குரிய புது வாழ்வில் பிரவேசிக்க வேண்டும் என்பதே பவுலின் மறைவான கருத்தாக உள்ளது.

ஞானஸ்நானம் என்பதை வெறும் அடையாளச் செயல் என்பதற்கும் மேலானதாகப் பவுல் கண்ணோக்கினார். டக்ளஸ் மூ பின்வருமாறு எழுதினார்:

> ... ரோமர் 6ம் அதிகாரத்திலோ, அல்லது [புதிய ஏற்பாட்டில்] வேறு எங்குமோ, உண்மையான உடல் அசைவுகள் - ஞானஸ்நானத்தில்

*மூழ்கி, எழுதல் [அதாவது தண்ணீருக்குள் சென்று பின்பு வெளிவருதல்] - என்பவை அடையாளக் குறிப்பிடுதலாகக் கருதப் பட்டதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. ரோமர் 6ல் ஞானஸ்நானம் ஒரு சடங்காகக் குறிப்பிடப்படவில்லை ஆனால் ஞானஸ்நானத்தின் எளிய நிகழ்ச்சியே குறிப்பிடப்பட்டுள்ளது என்பது உறுதி.*[1]

ஆன்டர்ஸ் நைக்ரென் அவர்களும் இதைப் பின்வருமாறு ஒப்புக் கொள்கின்றார்:

> *ஞானஸ்நானம் பெறுபவர் தண்ணீருக்குள் மூழ்கும் பொழுது அச்செயலானது ''கிறிஸ்துவுடன்'' அடக்கம் செய்யப்படுதலைக் குறிக்கின்றது; மற்றும் அவர் மீண்டும் தண்ணீரை விட்டு வெளியே வரும் பொழுது, அது ''கிறிஸ்துவுடன்'' உயிர்த்தெழுதலைக் குறிக்கின்றது. ஆனால் அந்தக் காரணத்திற்காக ஞானஸ்நானத்தை பற்றிய பவுலின் கண்ணோட்டத்தை ''அடையாளம்'' என்று அவ்வார்த்தை பொதுவாகப் பயன்படுத்தப்படும் கருத்தில் குறிப்பது என்பது முற்றிலும் தவறான குறிப்பிடுதலாய் இருக்கும். ஏனெனில், பவுலின் கூற்றுப்படி ஞானஸ்நானத்தில் நாம் வெறும் அடையாளக் குறிப்பிடுதல்களுடனல்ல ஆனால் உண்மை நிலைகளுடன் செயல்பட வேண்டியுள்ளது. ஞானஸ்நானம் என்பது உண்மையில் நிகழ்கின்ற வற்றை அடையாளப் படுத்துவதாகவும், ஞானஸ்நானத்தின் மூலமே அது சுருக்கமாய் அடையாளமாவதாயும் உள்ளது.*[2]

எனவே ஞானஸ்நானம் என்பது நம்மை இயேசுவுக்குள்ளும் மற்றும் அவருடைய மரணத்துடன் இனைந்துள்ள ஒரு மரணத்திற்குள்ளாக்கு கின்றது.

## புதுவாழ்வு பற்றிய மூன்று கேள்விகள்

ரோமர் 6:1-3ல் பவுலினால் மூன்று வளர்நிலைக் கேள்விகள் கேட்கப் பட்டன: (1) “கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாமா?” (வ. 1ஆ); (2) ''பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?” (வ. 2); (3) “கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?” (வ. 3).

முதலாவது கேள்விக்குப் பவுல் பின்வருமாறு பதில் அளித்தார்: “கூடாதே.” இந்தச் சொற்றொடரின் பயன்பாடானது கிறிஸ்தவர்கள் தங்கள் பாவங்களைக் கிருபையானது மூடுமென்று எதிர்பார்த்து பாவத்தில் தொடர்ந்து இருக்கக் கூடாது என்பதை மறைவாய்ச் சுட்டிக்காட்டுகின்றது என்பது உறுதி. பவுலின் கேள்வியானது சொல்லணியுடையதாக இருந்தது; அவர்கள் அதற்கான பதிலை அறியாதிருந்தனர் எனவே தாம் அவர்களுக்கு அப்பதிலைத் தெரிவிப்பதாகப் பவுல் அங்கு கருத்தை அறியப்படுத்தவில்லை. மாறாக, அவர்கள் ஞானஸ்நானத்தில் பெற்றிருந்த அனுபவத்தின் வாயிலாக, பவுல் கூறியதை ஏற்கனவே புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்ற அர்த்தத்தையே அவர் வலியுறுத்தினார்.

*இது போலவே, பவுலின் இரண்டாம் கேள்வியும் தனது சொந்தப் பதிலைத் தெரிவிக்கின்றது. நாம் பாவத்திற்கு மரித்தவர்களாயிருந்தால், இனியும் அதில் வாழக் கூடாது.*

*மூன்றாம் கேள்விக்குப் பதிலுரையாக - இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் - நாம் அவருடைய மரணத்திற்குள் பிரவேசித்த பொழுது, பாவத்திற்கு நாம் மரித்தோம் என்று பவுல் பதில் அளித்தார். அந்த மரணத்திலிருந்து நாம் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளதால், பாவம் நிறைந்த நடைமுறைகளில் இருந்து விடுதலையான புதிய வாழ்வில் நாம் நடந்து கொள்ள வேண்டும்.*

*"மரித்த" (வ. 2, 7, 8), "மரித்தோர்" (வ. 11, 13) மற்றும் "மரணம்" (வ. 4) என்பவற்றினால் நமது பாவம் நிறைந்த கடந்த காலம் ஒழிவதே விளைவாய் இருக்க வேண்டும் என்று பவுல் அர்த்தப்படுத்தினார். "... ற்கு மரித்த," "... ற்கு மரித்துள்ள" மற்றும் "... ற்கு மரிக்கும்" என்பவற்றினால் அவர் நம்மை முன்பு கட்டுப்படுத்திய பாவத்தின் வல்லமை ஒழிய வேண்டும் என்ற கருத்தை விளக்கப்படுத்தினார் (ரோமர் 7:4; கலா. 2:19; கொலோ. 2:20; 3:3-5; 1 பேது. 2:24). நாம் "பாவத்திற்கு மரித்ததாக" பவுல் வசனம் 2ல் எழுதினார். ''அது எப்பொழுது மற்றும் எவ்விதம் நடைபெற்றது? அப்போஸ்தலரின் கூற்றுப்படி அது ஞானஸ்நானத்தில், ஞானஸ்நானத்தின் மூலமாகவே நடைபெற்றது.''[3]*

*பாவ வாழ்வை முடித்து நீதியின் வாழ்வான ஒரு புது வாழ்வைத் தொடங்குதல் என்பதே பாவத்திற்கான மரணத்தில் நாம் பிரவேசிப்பதன் நோக்கமாக உள்ளது (ரோமர் 6:4). நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் சாயலில் ஆவிக்குரிய வகையில் பங்கு பெறுகின்றோம். இயேசு தம் உயிர்த்தெழுதலின் மூலமாக ஒரு சரீரப் புதுப்பித்தலுக்குள் பிரவேசித்தது போலவே, நாம் ஞானஸ்நானத்தின் மூலம் ஒரு ஆவிக்குரிய புதுப்பித்தலுக்குள் பிரவேசிக்க வேண்டும் (ரோமர் 6:5).*

*"நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் (ஞானஸ்நானத்தில்) அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்ட தென்று" (ரோமர் 6:6) ஞானஸ்நானத்தில் இது நடைபெறுவதால் இந்த நிலை மாற்றம் ஏற்படுகின்றது. பழைய இயல்பின் ஒரு பகுதி மட்டும் ஒழிந்து போக வேண்டுமென்றல்ல ஆனால் பழைய மனிதன் முற்றிலுமாக இயேசுவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று பவுல் கருத்துத் தெரிவித்தார். இதன் விளைவாக நாம் ''பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கின்றோம்'' (ரோமர் 6:7). பாவத்துக்கு மரித்தவர்கள் ஆவதினால், பாவத்தின் அடிமைத்தனம், பாவத்தின் ஆளுகை, மற்றும் பாவத்தின் நடைமுறை ஆகியவற்றினின்று நாம் விடுதலையாக்கப் பட்டுள்ளோம். ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்ப்பிக்கப்படும் பொழுது இயேசுவுடன் நாம் கொண்டுள்ள ஆவிக்குரிய ஈடுபாட்டின் காரணமாக இவை யாவும் நடைபெற வேண்டும்.*

பாவத்திற்கு மரித்து, நீதிக்குப் பிழைத்தல் என்பது ஞானஸ்நானம் என்ற செயலினால் மட்டுமே, ஏற்பட்டு விடாது, ஆனால் அந்தச் செயலுடன் இணைந்துள்ள இருதயப் பூர்வமான பதிலினால் ஏற்படுகின்றது. "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" (ரோமர் 6:17, 18).

## "இனிப் பாவத்துக்கு அடிமைகளாய் இருப்பதில்லை" (ரோமர் 6:6, 7)

மன்னிக்கப்படுதல் என்பது ஞானஸ்நானத்துடன் இணைந்துள்ள ஆசீர்வாதங்களில் ஒன்றாக இருப்பினும் (அப். 2:38; 22:16) பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுதல் என்பதைப் பற்றிப் பவுல் பேசுகையில் அவர் மேற் கூறியதை (மன்னிக்கப்படுதலைப்) பற்றிய கருத்தில் பேசவில்லை. பாவத்தின் அடிமைத்தனம் மற்றும் ஆளுகை ஆகியவற்றிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டுள்ளதால், நம்மை மன்னிப்பதற்கான தேவகிருபையைச் சார்ந்தவர்களாய் பாவச் செயல் முறைகளை இனித்தொடரக் கூடாது என்பதைக் காண்பிப்பதே ரோமர் 6:1-4ல் அவரது நோக்கமாய் உள்ளது. பாவத்திலே வாழ்வதென்பது கிறிஸ்தவர்களுக்குச் சாத்தியமற்றதென்று அவர் கூறவில்லை; மாறாக, பாவம் செய்தல் என்பது நமது புதுவாழ்வுக்கும் மற்றும் பாவத்திலிருந்து பெற்ற நமது புது விடுதலைக்கும் முரண்பாடானது என்றுதான் அவர் கூறினார். பாவத்திற்கான மரணத்திலும் புதிய ஜீவனிலும் ஞானஸ்நானத்தின் வழியே நாம் இயேசுவுடன் பிரவேசித்துள்ளதால் ஒரு புதிய வாழ்வை வாழ வேண்டும். பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட வேண்டும்; பாவ சரீரம் ஒழிந்து போக வேண்டும், மற்றும் நாம் இனியும் பாவத்திற்கு ஊழியம் செய்யக் கூடாது (ரோமர் 6:6).

இதனால் நம்மையே நாம், "பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத் திருக்கிறவர்களாகவும்" (ரோமர் 6:11) கருத வேண்டும். நாம் பாவத்திற்குக் கீழ்ப்படிந்து அதற்கு அடிமைகள் ஆகும் அளவுக்கு நமது சரீரத்தைப் பாவம் ஆளும்படியாக நாம் அனுமதிக்கக் கூடாது (ரோமர் 6:12).

நாம் பாவத்தில் வாழ்ந்தால், நாம் பாவத்திற்கு அடிமைகளாகி விடுகின்றோம் (ரோமர் 6:16). நாம் நீதிக்கு அடிமைகளாக வேண்டும், ஏனெனில் நாம் பாவத்தின் அடிமைத்தனம் மற்றும் ஆளுமை ஆகியவற்றில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம் (ரோமர் 6:13, 16, 19, 22). நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் அல்ல ஆனால் கிருபையின் மன்னிக்கும் பயன்பாட்டின் கீழ் இருக்கின்றோம் என்ற உண்மையானது (ரோமர் 6:15) நம்மைப் பாவத்திலிருந்து விடுதலையாக்குகின்றதே தவிர பாவம் செய்வதற்கல்ல. பாவம் அடிமைப்படுத்துகின்றது; அது விடுதலையைக் கொடுப்பதில்லை (யோவா. 8:34). இந்தக் காரணத்தினால், நாம் இனியும் பாவம் செய்யக் கூடாது, ஆனால் பாவத்திற்கு மரித்தவர்களாய், நீதிக்கு

*வாழ்பவர்களாய் இருக்க வேண்டும். நாம் ஞானஸ்நானம் பெற்றபோது இருதயப் பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினால் பாவத்திலிருந்து விடுதலை யானோம் (ரோமர் 6:4-6, 17, 18).*

## தொகுப்புரை

*இவ்வசனப் பகுதியில் பவுல், ஞானஸ்நானம் என்பதை நமது பழைய வாழ்வை முடித்து, புதிய வாழ்வைத் தொடங்குதல் என்ற செயலின் மையப் பகுதியாக ஆக்கினார். இது இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுடன் இருதயத்திலிருந்து இணைவதால் நடைபெறுகின்றது. ஞானஸ்நானம் என்ற செயல்பாடானது தன்னிலேயே இப்படிப்பட்ட நிலை மாற்றத்தைக் கொண்டு வரும் என்று அவசியமில்லை. இருப்பினும், ஞானஸ்நானம் என்ற செயலில் நாம் ஆவிக்குரிய வகையில் இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுடன் இணையும் பொழுது, இந்த நிலைமாற்றம் நடக்கும் என்று புரிந்து கொள்கின்றோம், மற்றும் அப்பொழுது பழைய வாழ்வு முடிந்து, போய், ஒரு புது வாழ்வு தொடங்கும்.*

---

*குறிப்புகள்*

[1]Douglas J. Moo, *The Epistle to the Romans*, The New International Commentary of the New Testament, gen. eds. Ned B. Stonehouse, F. F. Bruce, and Gordon D. Fee (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1996), 362. [2]Anders Nygren, *Commentary on Romans*, trans. Carl C. Rasmussen (Philadelphia: Muhlenberg Press, 1949), 233. [3]Ibid., 234.